STC.No. 266–2026
நாள் 15.05.2026.
P.W.1 – (மாரிச்சாமி )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
மனுவின் பெயரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் டிவிஎஸ் நிறுவனத்தில் ஸ்பேர்ஸ் இன்ஜார்ஜ் ஆக வேலை பார்க்கிறேன். வாகனம் வாங்கி விற்பதும் சர்வீஸ் செய்து கொடுத்தும், ரியல் எஸ்டேட் தொழில் கூடுதலாக செய்கிறேன். நான் திருவில்லிபுத்தூரில் டிவிஎஸ் ஷோரூமில் வேலை பார்க்கிறேன். நான் கடந்த 3 மாதங்களுக்கு எபிடி கார் நிறுவனத்திற்கு மாறி விட்டேன். எனக்கு மாத சம்பளம் ரூ.26,000/– ஆகும். என் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணத்தை எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என் சகோதரர் மற்றும் என் தகப்பனார் ஆகியோர் ஒரே வீட்டில் இருக்கிறோமா என்றால் ஆம், சமீபத்தில் மூன்று மாதங்களுக்கு முன் நான் என் மனைவி பிள்ளையுடன் தனியாக வசிக்க துவங்கினேன். நான் தற்போது கோவிந்தநகர் காலணி திருவில்லிபுத்தூரில் தனியாக வசிக்கிறேன். எதிரிக்கு எதிராக என் சகோதரர் தினேஷ் குமார் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

என் சகோதரர் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் விபரம் எனக்கு தெரியும். என் சகோதரர் கடன் கொடுத்தது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, என் சகோதரர் எதிரிக்கு எதிராக வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் வழக்கு போடும்போதுதான் எனக்கு தெரியும். கொடுக்கல் வாங்கல் எனக்கு தெரியாது. நானும் எதிரியும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் சேர்ந்து செய்து வந்தோம் என சொல்லியுள்ளதால் எந்தெந்த இடம் ரியல் எஸ்டேட் தொழில் செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆம், எந்த இடமும் வியாபாரம் சரியாக முடித்து தரவில்லை. என் நிருபண வாக்குமூலத்தில் எதிரி எந்த இடத்தையும் வியாபாரம் முடித்து தரவில்லை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எதிரிக்கு எத்தனை பிள்ளைகள், எங்கு படிக்கிறார்கள், என்ன படிக்கிறார்கள் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு நான் இரண்டு ஆண்டுகளில் போன் செய்தேனா என்றால் செய்துள்ளேன். எதிரியின் செல்போன் எண் சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை.

எனக்கும் எதிரிக்கும் எந்த வியாபார தொடர்பும் கிடையாது என்றாலும் எனக்கு அதனால்தான் எதிரி குறித்து எந்த விவரமும் தெரியாது என்றாலும் சரியல்ல. வியாபாரம் பேசியது ஏதும் முடியவில்லை. நான் எதிரி மூலமாக எந்த வியாபாரமும் முடியவில்லை என குறிப்பிடுவதால் எதன் அடிப்படையில் எதிரிக்கு நான் ரூ.5 லட்சம் கொடுத்தேன் என்றால் கடனை திருப்பி ஒரு மாதக் காலத்தில் தந்துவிடுவதாக சொல்லியிருந்தார். அந்த அடிப்படையில் கடன் கொடுத்தேன். நானும் என் சகோதரர் தினேஷ் குமாரும் எதிரி என் தாயாரிடம் வியாபாரம் சம்மந்தமாக கொடுத்திருந்த வெற்று காசோலைகளை வைத்து எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் உறுதி மொழி பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய தாயார் கையொப்பபம் என்றால் சரி. 18.06.2021 தேதியிட்ட உறுதி மொழி பத்திரத்தின்

TMardy

சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.1** ஆகும். என் அப்பா எதிரியுடன் செய்த ரியல் எஸ்டேட் தொழிலில் எந்தெந்த இடத்தை வாங்கி விற்பனை செய்தார்கள் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. அபிமன்னன் கருப்பசாமி என் குடும்ப நண்பர் என்றால் சரி. அபிமன்னன் கருப்பசாமி என் சகோதரன் திணேஷ்குமார் வழக்கிலும் சாட்சியம் அளித்தார் என்றால் சரி. அபிமன்னன் கருப்பசாமி ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார். நான் ரூ.5 லட்சம் அபிமன்னன் கருப்பசாமியிடம் கடன் வாங்கினேன். என் சகோதரன் திணேஷ்குமார் அபிமன்னன் கருப்பசாமியிடம் கடன் வாங்கியுள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது.

நான் அபிமன்னன் கருப்பசாமியிடம் கடன் வாங்கியதாக சொல்லும் விபரம் என் அப்பா மற்றும் தம்பிக்கு தெரியும் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்த சமயம்தான் தெரியும். நான் அபிமன்னன் கருப்பசாமியிடம் கடன் வாங்கிய சமயம் என் தாயார் என்னுடன் இருந்தார். பொதுவாக, ஒருவர் கடன் வாங்கி மற்றவருக்கு கடன் கொடுக்கமாட்டார் என்றால் நான் என் வியாபாரத்திற்காக கடன் வாங்கினேன். நான் என் நிருபண வாக்குமூலத்தில் நான் என் வியாபாரத்திற்காக கடன் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் கடன் வாங்கிய ரூபாயில்தான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்வதால் எனக்கு ரூ.5 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் அந்த சமயத்தில் இல்லை. எதிரி என் பெற்றோர், என் தம்பி திணேஷ்குமார், அபிமன்னன் கருப்பசாமி மற்றும் நாராயணசாமி ஆகியோருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த புகார் சம்மந்தமாக என் பெற்றோர் காவல் நிலைய விசாரணைக்கு சென்று வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

என்னிடம் காட்டப்படும் சமரச ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றாலும் அதில் என் பெற்றோர், என் சகோதரர் கையொப்பங்கள் உள்ளது என்றாலும் சாட்சி கையொப்பத்தில் நாராயணசாமி கையொப்பம் உள்ளது என்றாலும் சரி. அது **எ.சா.ஆ.2** ஆகும். அந்த ஆவணம் தொலைந்துவிட்டதாக புகார் கொடுத்துள்ளோம். இந்த வழக்கும் என் சகோதரர் திணேஷ்குமார் தாக்கல் செய்த வழக்கும் நிலுவையில் இருந்த சமயம் எ.சா.ஆ.2 ஏற்பாடு நடைபெற்றது என்றால் சரி. நான் என் நிருபண வாக்குமூலத்தில் 22.04.2025 அன்று எதிரி என் வீட்டிற்கு வந்ததாக சொல்லும் விபரம் எங்கள் வீட்டு கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் எங்கள் வீட்டில் கண்காணிப்பு கேமரா இல்லை. எதிரி 22.04.2025 அன்று எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் என்னை சந்திக்கவில்லை என்றாலும் என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும் சரியல்ல. பு.சா.ஆ.1 காசோலையில் கையொப்பத்திற்கும் ஏனைய விபரங்களுக்கும் எழுத்து வேறுபாடாக காணப்படுகிறது என்றால் இல்லை. தேதியில் எண் 2 ஒன்றின் மேல் ஒன்று எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றால் ஆம்.

2021ம் ஆண்டு என் தாயாருக்கு என் தாயார் கொடுத்த உறுதி மொழி ஆவணத்தின் படி எதிரியால் வழங்கப்பட்ட காசோலை என்றாலும் அதனை என் தோதிற்கு நான் நிரப்பி எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார் மற்றும் என் சகோதரர் ஆகியோர் எதிரிக்கு பணம் கொடுத்து வசூல் ஆகாத நிலையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு வங்கி மூலமாக பணம் அனுப்பவில்லை என்றால் ஆம். ரொக்கமாக கொடுத்தேன். ஏற்கனவே வழக்கு

T Marly.

நிலுவையில் இருப்பதாக என் குடும்பத்தார் சொல்லும்போது எதிரிக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தேதியிலும் என்னிடம் பணம் கேட்கவில்லை என்றாலும் அவ்வாறு கேட்டிருந்தால் நான் எதிரி எப்போது எங்கு வைத்து பணம் கேட்டார் என்ற விபரங்களை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி நிலம் வாங்குவதற்காக ரூ.5 லட்சம் கேட்டார் எனச் சொல்லியுள்ளேன் எந்த நிலம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எதிரி எந்த நிலம் என எனக்கு சொல்லவில்லை. எதிரி என் பெற்றோரிடம் வியாபாரம் பார்த்து அவர்களிடையே பிரச்சனை ஏற்பட்டு என் தாயாரிடம் இருந்த எதிரியின் காசோலையை கொண்டு என் பெயரில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி என் பெற்றோருக்கு எதிராக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என சமரச உடன்படிக்கை எழுதிக் கொடுத்துவிட்டு, எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது ஏதும் நடைமுறைக்கு வரவில்லை.

T Mourthy

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

15/5/20

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.